செ.வெ.எண்: 44/ 2020 நாள்: 31.03.2020

# திருப்பூர் மாவட்டம்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு !!!

கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவுதலை தடுத்திடும் பொருட்டு 25.03.2020 முதல் 14.04.2020-ம் தேதி வரை தமிழக அரசால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பொது ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு தமிழக அரசால் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிவாரணமாக வழங்கப்படும் என்றும், ஏப்ரல் மாதத்திற்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் குடும்ப அட்டைக்கு தகுதியான அளவு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி 02.04.2020 முதல் வழங்கப்படும்.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்திடும் பொருட்டு திருப்பூர் மாவட்டத்தில் நடைமுறையிலுள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் நிவாரண உதவித்தொகை பெறுவதற்கான டோக்கன்கள் 31.03.2020 மற்றும் 01.04.2020 ஆகிய தேதிகளில் வீடு வீடாக சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் மூலம் வழங்கப்படும். பொதுமக்களுக்கு வழங்கப்படும் டோக்கனில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் நியாயவிலைக் கடைக்கு வந்து நிவாரணத் தொகை மற்றும் ஏப்ரல்-2020-ம் மாத அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் , ரூ.1000/- நிவாரணத் தொகை மற்றும் விலையில்லாப் பொருட்களை பெற விருப்பம் இல்லாதவர்கள் இதற்கான வலைதளத்தில் மின்னணு முறையில் அல்லது செயலியில் (www.tnpds.gov.in/tnepds app) பதிவு செய்து கொள்ளலாம். குடும்ப அட்டைதாரர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவுதலை தடுத்திடும் வகையில் பொது சுகாதாரத் துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிய சமூக இடைவெளியை கடைபிடித்து நிவாரண உதவித்தொகை மற்றும் ஏப்ரல்-2020-ம் மாத அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ள வேண்டும். மின்னணு குடும்ப அட்டை இல்லாத இனங்களில் அவர்களுக்கு அக்குடும்ப அட்டையில் உள்ள நபர்களில் ஏதேனும் ஒருவரின் ஆதார் அட்டையினை வைத்து நிவாரண உதவித்தொகை பெற்றுக் கொள்ளலாம். இப்பணி குறித்து புகார்கள் ஏதும் இருப்பின் அதனை தெரிவிக்க மாவட்ட கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்.**0421-2971116** தொடர்புகொள்ள தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**